# பெரியார் & பாரதிதாசன் – சிந்தனைகள் ஒப்பீடு

**பேரா. முனைவர். இ.கி. இராமசாமி**




### கட்டுரைச் சுருக்கம்:

*தந்தை பெரியார் & புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் ஆகியோரைப் பற்றிய இந்தக் கட்டுரை, ஒப்பியல் அணுகுமுறையின் அடிப்படையில் அமைந்தது. பெரியாரின் சித்தாந்தங்களையும் செயற்பாடுகளையும் உள்வாங்கி உணர்ச்சிப் பிழம்பாகக் கவிதை வடித்துக் காட்டிக் களமாடியவர் பாரதிதாசன். பெரியார் பெருந்தொண்டரான பாரதிதாசனுக்குத் தமிழ்க்கல்விக் கொள்கையில் தனிப்பட்ட கருத்து இருந்தது உண்மை. கடவுள் மறுப்பு, சமய மறுப்பு, சாதி மறுப்பு, வர்ணபேத ஒழிப்பு, வர்க்கபேத ஒழிப்பு, பெண்ணடிமை ஒழிப்பு, பார்ப்பனிய எதிர்ப்பு, மூடநம்பிக்கை ஒழிப்பு, வகுப்புரிமை, சமத்துவம், சகோதர தத்துவம், சுதந்திரம், புதுமை தேடல் போன்ற பெரியார் சீர்திருத்தச் சிந்தனைகளை வழிமொழிந்து இயங்கியவர் பாரதிதாசன். பாரதிதாசனைப் போல வேறு கவிஞர்களைப் பெரியார் மிகவும் பாராட்டியதாகத் தெரியவில்லை. அதே போல அதிகப்படியான கவிதைகள் பாடிப் பெரியாருக்குப் புகழ்மாலை சூட்டியவர் பாரதிதாசன். அவை திராவிட இயக்க வரலாற்றுப் பதிவுகளாகும்.*


### சுயமரியாதை இயக்கம்:

இருபதாம் நூற்றாண்டின் சமுதாய விஞ்ஞானிகளான பெரியார், பாரதிதாசன் ஆகியோர் சிந்தனைகளை ஒப்பீடு செய்து காட்டுவது எளிய முயற்சி அல்ல. எனினும் **சமூகநீதி, இறைமறுப்பு, பெண்விடுதலை, மொழிக்கொள்கை, தமிழிசை இயக்கம், பொதுவுடைமை** ஆகிய கொள்கைத் தளங்களில் அவர்கள் இருவரும் எவ்வாறு இயங்கினர் என்பதைக் காட்ட முயல்கிறது இந்தக் கட்டுரை.

**சுப்பிரமணியர் துதிஅமுது, கதர்ராட்டினப் பாட்டு** ஆகியவற்றைப் பாடிக்கொண்டு புதுச்சேரிக் குடிமகனாக இருந்த பாரதிதாசனுக்கு மடைமாற்றத்தை ஏற்படுத்தியவர் தமிழ்நாட்டுத் தலைவராக இருந்த பெரியார். 1928- முதல் பெரியார் பாதையில் எவருக்கும் அஞ்சாத அரிமாவென நடைபயின்றார் பாரதிதாசன்.

'சுயமரியாதைப் பெயர்கொள் பயிர்செழிக்கத்
தொண்டு செய்யும் இராமசாமித் தலைவர்
செயற்கரிய செயப் பிறந்த பெரியோய்!'

என்று பெரியார் நடத்தி வந்த குடியரசு இதழுக்கு 1929ஆம் ஆண்டிலேயே கவிதை எழுதினார். இடஒதுக்கீடு கேட்டுப் போராடி அதனைப் பெறமுடியாத காரணத்தினால் காங்கிரசைவிட்டு வெளியேறிச் சுயமரியாதை இயக்கங் கண்டபின்பு பெரியார் 1929இல் செங்கல்பட்டில் முதல் சுயமரியாதை மாநாட்டைக் கூட்டினார். அதில் சமூகநீதி, சாதி ஒழிப்பு, பெண்ணுரிமை, பொதுவுடைமை (சமதர்மம்) உள்ளிட்ட புரட்சிகரமான தீர்மானங்களை நிறைவேற்றித் தென்னாட்டு வரலாற்றில் ஒரு புதிய திருப்பத்தைத் தொடங்கிவைத்தார்.

அந்தச் சுயமரியாதை மாநாட்டுச் செயல்திட்டத்தை,

“சாதிமத பேதங்கள் மூடவழக்கங்கள்
தாங்கி நடைபெற்றுவரும் சண்டை உலகுதனை
ஊதையினில் துரும்பு போல் அலைக்கழிப்போம்;
பின்னர்
ஒழித்திடுவோம்; புதியதோர் உலகம் செய்வோம்!
பேதமிலா அறிவுடைய அவ்வுலகத்திற்குப்
பேசு சுயமரியாதை உலகு எனப்பேர் வைப்போம்.”[1]

என வரவேற்றுப் பாடினார் பாரதிதாசன். 1964இல் இயற்கை எய்தும் வரை பாரதிதாசனின் நிலைப்பாடு பெரியாரின் சிந்தனைவழி நின்றது. இருவருக்கும் மொழிக்கொள்கைகளில் மட்டும் ஒற்றுமையும் நுட்பமான வேற்றுமையும் இருந்ததைப் பின்னர் காண்போம்.

## சமூகநீதி:

சமூகக் கொடுமைகளை, உணர்ச்சி பொங்கச் சாடுவதால் மட்டுமே அவை வீழ்ந்துவிடுவதில்லை; அழிந்து போவதும் இல்லை. அவற்றைத் தாங்கி நிற்கும் சாதிச் சமுதாயக் கட்டமைப்பைத் தகர்க்க முதலில் முயலவேண்டும். பிறப்பின் அடிப்படையில் உயர்வுதாழ்வுகற்பிக்கப்பட்டுமேலானசலுகை பெற்று வளமான தொழில், வாணிகம், கல்வி, பதவி, அதிகாரம், வருமானம் ஆகியவற்றைப் பெற்று அனுபவித்துக் கொண்டுவரும் மேல்சாதியார் ஒடுக்கப்பட்டோருக்குரிய வாய்ப்பை ஒரு போதும் தரமாட்டார்கள். சுவை கண்டவர்கள் விடுவார்களா? இவ்வாறு வாய்ப்பு மறுக்கப்பட்டோருக்குக் கல்விநிலையிலும் வேலைவாய்ப்பிலும் இடஒதுக்கீடு கேட்டு – சமூகநீதி கேட்டுப் போராடிய பெரியாருக்குத் தளபதியாக நின்றவர் பாரதிதாசன். பிற்பட்டோருக்கு வகுப்புவாரி உரிமையை உண்டாக்கிக் கொடுத்த அமைச்சர் முத்தையா முதலியாரை வாழ்த்திப் பாராட்டியவர் பாரதிதாசன். சமூகநீதி ஏற்பாட்டைப் பெரியாரும் அண்ணல் அம்பேத்காரும் ஒரு செயல்திட்டமாகப் பின்னாளில் கையில் எடுத்துக்கொண்டபோது அதற்குச் சார்பாக முழங்கினார் பாரதிதாசன்:

“கற்றவர், கல்லாரிடத்தும் கல்வியைப்
பரப்ப முயலவில்லை பாழிருள்
விட்டு மீண்டவர் பிறரை மீட்கிலர்
கற்றவர் சிலர், கல்லாதவர் பலர்
என்னும் இழிவு நாட்டில் இருக்கலாம்
என்பது கற்றவர் எண்ணம் போலும்!
எல்லாரும் இந்த நாட்டில் கற்றவர்

எனும் நிலை இயற்றுதல் கற்றவர் பொறுப்பே”[2]

பிரெஞ்சு அரசின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த தமிழ் மண்ணில் வாழ்ந்த பாரதிதாசனுக்குச் சமத்துவக் கோட்பாட்டின் வீறு தெரிந்திருந்தது. அதனால்,

“இதந்தரும் சமநோக்கம்
இல்லாத நிலத்திலே நல்ல
சுதந்தரம் உண்டாகுமோ – சகியே
சுதந்தரம் உண்டாகுமோ?”[3]

என்று **சமத்துவப் பாட்டுப்** பாடினார். சமூக நீதிப் போராட்டத்தைப் பெரியார் நிகழ்த்த, அதனைப் பதிவு செய்யும் ஆவணமாகப் பாரதிதாசன் பாட்டுக்கள் அமைந்தன. பெரியாருக்கோ, பாரதிதாசனுக்கோ தனிப்பட்ட முறையில் இடஒதுக்கீடு தேவையில்லை. அவர்கள் கல்வியிலும் சமூகநிலையிலும் பின்தங்கியவர்கள் அல்லர். ஆனால் பிற்படுத்தப்பட்ட ஒடுக்கப்பட்ட சக மனிதர்களுக்காகப் போராடினர் என்பதுதான் குறிப்பிடத்தக்க தகவலாகும். அவர்களுடைய மாந்தநேயப் பண்புக்கு ஈடே இல்லை. வாய்ப்பு மறுக்கப்பட்டவரின் வலியை இருவரும் உணர்ந்தவர்கள். அதனால் சமத்துவக் கோட்பாட்டைப் பரப்பினார்கள். அது நிறைவேறப் போராடினார்கள். அதில் அவர்கள் வெற்றி தோல்விகளைச் சந்தித்தார்கள். தோல்வியைக் கண்டு துவண்டுவிடவில்லை.

## இறை மறுப்பாளர்கள்:

பெரியாரின் பகுத்தறிவுப் பார்வையும் கடவுள் மறுப்புக் கொள்கையும் பாரதிதாசனுக்கு உடன்பாடானவை. அதனால் 1933 முதலே தம்மை ஒரு நாத்திகராக அறிவித்துக் கொண்டார். இவர்களுடைய இறைமறுப்புக் கொள்கை, வாதப்பிரதிவாதங்களைத் தூண்டும் நோக்கில் உருக்கொண்டது அல்ல. சமுதாயத்தில் பல நூற்றாண்டு காலமாகக் கற்பிக்கப்பட்டு வந்த, மனிதகுலத்தைக் கீழ், மேல் என்று பிரித்து வைத்துப் பல கொடுமைகளுக்கு இறைநம்பிக்கை காரணமாக இருந்தபடியால், இறைமறுப்புக் கொள்கை உருவாக்கப்பட்டது. சமத்துவமும், தோழமையும், சமஉரிமையும் உண்டாக்க உருவாக்கப்பட்டது. இன்னும் சொல்லப்போனால் இறைமறுப்புக் கொள்கை பழைய உலகாயதம்தான் என்ற உண்மையை இவர்கள் மறுக்கவில்லை. ஆரியர் மற்றும் ஆரிய அடிவருடிகளின் நலனுக்காகக் கற்பிக்கப்பட்ட கடவுட் கோட்பாட்டை இருவரும் மறுதலித்தனர்.

## பெண் விடுதலை:

'பெண் ஏன் அடிமையானாள்' என்ற பெரியாரின் பேச்சுத்தொகுப்பில் பெண்கல்வி, பெண் சமத்துவம், திருமணவாழ்வு, குடும்பக் கட்டுப்பாடு, சொத்துரிமை, உலகஅறிவு போன்ற பெண் முன்னேற்றச் சிந்தனைகளைக் காணுகின்றோம். பெண்கள் பொட்டு, பூ, அணிமணிகள் மீது ஆசை வைப்பதையும், ஆடவரைச் சார்ந்தே வாழவேண்டும் என்று நினைப்பதையும் விட்டுவிடவேண்டும் என்று பெரியார் வலியுறுத்தினார். அவருக்குப் **பெரியார்** என்ற பட்டத்தைப் பெண்கள்தான் கொடுத்தார்கள் என்பது வரலாற்று உண்மை. ஆண் துணையைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் உரிமை பெண்ணுக்கும், பெண்துணையைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் உரிமை ஆணுக்கும் வேண்டும் என்று ஆண் – பெண் சமத்துவம் பேசினார் பெரியார்.

இன்ப துன்பங்களில் சமபங்கு ஏற்கும் இணையர்களின் இல்வாழ்க்கையே அவர் விரும்பிய இல்லறநெறி.

பெரியாரின் பெருந்தொண்டரான பாரதிதாசன் பெண்குழந்தை தாலாட்டில்கூடப் புதுமை செய்தார். முதலில் பெண்கள் தெய்வீகத்தை நம்புவதை விடுத்துத் தன்னம்பிக்கையும் பகுத்தறிவும் பெறவேண்டும் என்றார்.

**"தெய்வீகத்தை நம்பும் திருந்தாத பெண்குலத்தை**
**உய்விக்க வந்த உவப்பே! பகுத்தறிவே!"[4]**

என்ற பகுத்தறிவுப் பார்வை, பெண்களுக்கு வரவேண்டும் எனப் பாடிவைத்தார் பாரதிதாசன். 3000 ஆண்டு தமிழ் இலக்கிய வரலாற்றில் இப்படியொரு கவிதையைப் பாடியவர் பாரதிதாசன் ஒருவராகத்தான் இருக்கமுடியும். அவர்மீது எத்தனை பேருக்கு எரிச்சல் உண்டாகியிருக்கும் பாருங்கள்! ஆனாலும் அந்தக் கருப்புக்குயிலின் நெருப்புக்குரல் யார் காதிலும் விழவில்லை.

பிறன்மனை நோக்கியவனைப் பாரதிதாசனின் தமிழச்சியின் கத்தி குத்திக் கொல்லுகின்றது. பெரியார் சொன்ன கர்ப்ப ஆட்சியை உள்வாங்கி,

**"காதலுக்கு வழிவைத்துக் கருப்பாதை சாத்திடக்**
**கதவொன்று கண்டறிவோம், இதிலென்ன குற்றம்?"[5]**

என்று பெண்விடுதலைக்குக் குரல் கொடுத்தார் பாரதிதாசன். மணமுறிவு என்பது பெரியார், பாரதிதாசன் அகராதியில் ஒரு கெட்ட வார்த்தை அல்ல. விதவை மணம் அவர்களுக்குப் புனிதமான சொல்லும் செயலுமாகும். தாலி கட்டாத திருமணம், தாலி அகற்றும் சமஉரிமை நிகழ்வு ஆகியன அவர்களுக்கு இயல்பானவை. பொதுப்புத்தியாளர்களுக்குப்

புதுமையானவை; திகைப்பும் எரிச்சலும் ஊட்டும் காரியங்கள். அதுவும் காணிக்கையை உண்டியலில் போடுவதைவிட தட்சணையாகத் தட்டில் போடச்சொல்லும் பார்ப்பனர்களுக்குக் கசப்பானவை.

## பெரியாரின் மொழிக்கொள்கை:

பெரியாரைப் பொறுத்தமட்டில் மொழி, கருத்துப் பரிமாற்றத்திற்குரிய ஒரு கருவி. ஒரு கருவியைப் பயன்படும்வரை வைத்துக்கொண்டு அது பயன்படாத நிலையில் அதைத் தூக்கி எறிந்துவிட வேண்டும். அதுபோல மொழியையும் தூக்கி எறிந்துவிட வேண்டும் என்று பெரியார் சொன்னதாகச் சிலர் கூறுவதுண்டு. அவர்கள் பெரியாரைச் சரியாகப் புரிந்து கொள்ளாதவர்கள். பெரியாரின் மொழிக்கொள்கை ஆழமானது; மேலானது. காரண காரியத்தோடு கூடியது. இவ்வுண்மையை அவருடைய பேச்சின் மூலம் தெளியலாம்.

“மக்களுக்கு வேண்டிய பற்றுக்களுள் தலையாய பற்று மொழிப்பற்று. மொழிப்பற்று இல்லாதவரிடத்தில் தேசப்பற்று இருக்காது என்பது நிச்சயம். **தேசம் என்பது மொழியை அடிப்படையாகக் கொண்டு இயங்குவது. ஆதலால் தமிழர்களுக்குத் தாய்மொழிப்பற்று பெருக வேண்டும் என்பது எனது பிரார்த்தனை.**

……………………………………………………

தாய்மொழியில் பற்றுச் செலுத்தாதிருக்கும்வரை தமிழர்கள் முன்னேற்றம் அடைய மாட்டார்கள்.”[6]

**“நான் தமிழ்மொழியின் மீது அன்பு வைத்திருக்கிறேன் என்றால் அதனிடத்தில் அதன்மூலம் நான் எதிர்பார்க்கும் நன்மையும், அது மறைய நேர்ந்தால் அதனால் ஏற்படும் நஷ்டத்தையும் உத்தேசித்தே** நான் தமிழ்மொழி மீது அன்பு செலுத்துகிறேன்.”[7]

“ஒன்றை விரும்புவதற்கும் வெறுப்பதற்கும் அதனதன் பலன் தான் காரணம் என்பதை மறுபடியும் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ், இந்த நாட்டு மக்களுக்குச் சகல துறைக்கும் முன்னேற்றம் அளிக்கக் கூடியதும், தன்மானத்துடனும் பகுத்தறிவுடனும் வாழத்தக்க வாழ்க்கை அளிக்கக்கூடியது என்பதும் எனது அபிப்பிராயம். ஆனால் அப்படிப்பட்டவையெல்லாம் தமிழ்மொழியில் இருக்கிறதா என்று சிலர் கேட்கலாம். எல்லாம் இல்லை என்றாலும் **மற்ற அநேக இந்திய பாஷைகளைவிட அதிகமான முன்னேற்றத்தைத் தமிழ் மக்களுக்கு அளிக்கக்கூடிய கலைகள், பழக்கவழக்கங்கள், அதற்கேற்ற சொற்கள் தமிழில் இருக்கின்றன என அறிகிறேன்”**[8]

பெரியாருடைய பேச்சிலிருந்து நாம் அவருடைய மொழிக்கொள்கையை அறிந்து கொள்ள முடியும். எனவே, பெரியாருக்குத் தமிழ்மொழிப் பற்றும் அது ஆற்றல் மிக்க மொழி என்ற தெளிவும் அது தன்மான உணர்ச்சியையும் பகுத்தறிவையும் ஊட்டும் மொழி என்ற உறுதிப்பாடும் இருந்ததை அறிகிறோம்.

ஆனால், பெரியார் உடனடியாக அறிவியல், மருத்துவம், பொறியியல் பாடங்களைத் தமிழ்வழிக் கற்பிக்கவேண்டும் என்ற கருத்தில் உடன்பட்டவர் அல்லர். தனித்தமிழ் இயக்கத்தினர் தமிழ்வழிக் கல்வியை (Tamil Medium) வலியுறுத்தியபோது சற்றே கடிந்துகொண்டார். தமிழ்ப் பயிற்சிமொழி மாநாட்டிலேயே **தமிழைக் காட்டுமிராண்டி மொழி** (1968) என்று சொல்லித் தம் சினத்தை வெளிப்படுத்தினார். ஆங்கிலமொழிவழி உயர்கல்வியை அவர் அந்தச் சூழ்நிலையில் வரவேற்றார். பெரியாரைப் பொறுத்தமட்டில் தமிழ்மொழிப் பற்று வேறு; தமிழ்வழிக் கல்வி வேறு. அதுவும் உயர்கல்வித் துறையில்

அறிவியல் பாடங்களை ஆங்கிலத்தில் கற்றுத்தர வேண்டும் என்பதும், ஆங்கிலம் உலகத் தொடர்புக்கு ஏற்றமொழி என்பதும், அவருடைய கருத்தாகும். ஆங்கிலத்தை விலக்கிவிட்டால் அந்த இடத்தை இந்தி பிடித்துக் கொள்ளும் என்ற கவலையும் அவருக்கு இருந்தது.

## பாரதிதாசனின் மொழிக்கொள்கை:

பாரதிதாசனுடைய மொழிக்கொள்கை உணர்ச்சிப் பூர்வமானது. தம் உடலை இயக்கும் **உயிராகவும்,** உயிரை இயக்கும் **நுண்கலையாகவும்** அவர் தமிழை வைத்துக் கொண்டார். அவருக்குத் தமிழ் **ஒரு மந்திரச்சொல்.** தமிழ்வழிப் பயின்றவர்தான் தமிழ்நாட்டு அரசு அலுவலராக வருதல் வேண்டும். அவர்தான் இந்த மண்வாசனையைப் புரிந்துகொண்டு மக்களுக்குச் சிறப்பாகப் பணிசெய்ய முடியும். தமிழ்நாட்டில் அரசுப்பணியாளராக வரும் ஒருவருக்குத் தமிழ்வழிக் கல்விதான் கைகொடுக்கும் என்று திடமாக நம்பினார் பாரதிதாசன். பயன்பாட்டு நோக்கில் அவர் தமிழ்க்கல்வியைக் கணித்தார்; வலியுறுத்தினார்.

**“மாங்காட்டுச் செவிடன் எதிர்**
**வடிகட்டிய ஊமையனை வைத்ததைப் போல்**
**தீங்கற்ற தமிழ் அறியான்**
**செந்தமிழ் நாட்டு அலுவலின் மேல் செல்லலாமோ”**[9]

அதனால்,

**“தமிழ்க் கல்வி தமிழ்நாட்டில்**
**கட்டாயம் என்று ஒரு**
**சட்டம் செய்க!**
**ஆங்கிலநூல் அறிவுக்குச்**
**சான்றிருந்தால் அது போதும்**
**அலுவல் பார்க்க”**[10]

என்று அறிவுரை சொன்னார் பாரதிதாசன்.

தமிழ்நாட்டில் பணி செய்ய விரும்புவோருக்கு இப்படியொரு கட்டாயச் சட்டத்தைப் போடச்சொன்ன பாரதிதாசனுக்கு புவியை நடத்து, பொதுவில் நடத்து என்ற உலகப்பார்வையும் இருந்தது. அதனால் தமிழ்நாட்டு மாணவர்களைப் பார்த்து பாரதிதாசன் சொன்னார்:

ஆங்கிலத்தையும் பிற அயல்மொழிகளையும் படியுங்கள். ஆனால் செந்தமிழை உயிரைப்போல வைத்துக்கொள்ளுங்கள் என்று அறிவுரை சொன்னார்.

**“ஆங்கிலத்தைக் கற்கையிலும்**
**அயல்மொழியைக் கற்கையிலும்**
**எந்தநாளும்**
**தீங்கனியைச் செந்தமிழைத்**
**தென்னாட்டின் பொன்னேட்டை**
**உயிராய்க் கொள்வீர்”**[11]

என்று பாடி வைத்தார். ஏதோ பாரதிதாசன் குறுகிய மனப்பான்மை படைத்தவர் என்றும் வெறும் தமிழ்த்தேசிய பார்வை மட்டும் உடையவர் என்றும் குற்றம் சாட்டுகிறவர்களுக்கு அவர்களின் கருத்தை மறுக்கும் சரியான விடையும் விளக்கமுமாக அவருடைய மொழிக்கொள்கை அமைந்திருப்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

## தமிழ் இசை இயக்கம்:

ஒரு காலச்சூழலில் பெரியாருக்கும் தமிழிசை இயக்கத்தில் ஆர்வம் ஏற்பட்டு இராஜாஜி, கல்கி, அண்ணாமலைச் செட்டியார், கி.ஆ.பெ.விசுவநாதன் ஆகியோருடன் இணைந்து தமிழிசை மறுமலர்ச்சிக்குப் பாடுபடத் தொடங்கினார். ஆனால் தமிழிசைப் பாடல்களில் உள்ளீடாகப் புராணங்களின் ஆளுமையும், பஜனையும் இருப்பதை கண்டு விலகிவிட்டார். ஆனால் பாரதிதாசன் தமிழிசை இயக்கத்திலிருந்து விலகிவிடவில்லை. தமிழில் பண்ணிசை இல்லை என்று சொல்லிவந்த தெலுங்கு

மற்றும் வடமொழி அன்பர்களுக்குத் தக்க பதிலடி கொடுத்தார். போட்டியாகத் தமிழில் கீர்த்தனைகள் எழுதிக் காட்டினார். தியாகராசர் முதலான கர்நாடக இசை மும்மூர்த்திகளின் பாடல்களை, மெட்டு மாறாமல், அதே ராக-தாளத்தில், தமிழில் மொழியாக்கிக் காட்டினார். 'மருகேலரா ஓ ராகவா' என்ற தெலுங்குப் பாடலை, 'மறைவென்ன காண் ஓ இராகவா' என்றெல்லாம் மெட்டு மாறாமல் செய்த மொழியாக்கம் இன்றும் காணவும் பாடவும் கிடைக்கிறது.

**“எந்தமிழில் இசை இல்லை!**
**எந்தாய்க்கே உடையில்லை**
**என்பதுண்டோ?”[12]**

என்று கொதிப்புடன் கேட்டார் பாவேந்தர்.

இன்னும் ஒருபடி மேலே சென்று கோயில் கருவறைக்குள்ளே திருவாசகமும் தேவாரமும் திருவாய் நன்மொழியான தேனும் பாடப்பெறவேண்டும். அதற்காகவே இளைஞர்கள் கிளர்ச்சி செய்யவேண்டும் என்று வேண்டினார்.

**“சொற்கோவின் நற்போற்றித்**
**திருஅகவல் செந்தமிழில்**
**இருக்கும் போது**
**கற்கோயில் உட்புறத்தில்**
**கால்வைத்த தெவ்வாறு**
**சகத்ர நாமம்?**
**தெற்கோதும் தேவாரம்,**
**திருவாய்நன் மொழியான**
**தேனி ருக்கச்**
**செக்காடும் இரைச்சலென**
**வேதபா ரயணமேன்?**
**திருக்கோயில் பால்?”[13]**

என்று காட்டமாகக் கேட்டார் பாரதிதாசன்.

## பொதுவுடைமை:

உருஷ்யா சென்றுவந்த பெரியார் தம் இயக்கத்தவரையும், மாற்றுமுகாமில் இருந்தவர்களையும், பெண்களையும் தோழர்களே என்றழைக்கத் தொடங்கினார். தம்மிடம் இருந்த அச்சுத் தொழிலாளர்களைப் பங்காளிகளாக்கினார். பொதுவுடைமைத் தத்துவத்தைத் தீவிரமாகப் பரப்பினார். அதனால் அன்றைய அரசின் அடக்குமுறைக்கு ஆளானார். தண்டிக்கப்பட்டார். பெரியார் வழியில் பாரதிதாசன் இன்னும் தீவிரமாகப் பரப்புரை செய்தார்.

**“காப்பார் கடவுள் உமைக் கட்டையில் நீர் போகுமட்டும்**
**வேர்ப்பீர் உழைப்பீர் எனவுரைக்கும் வீணர்”[14]**
**“ஓடப்ப ராயிருக்கும் ஏழையப்பர்**
**உதையப்பர் ஆகிவிட்டால் ஓர் நொடிக்குள்**
**ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி**
**ஒப்பப்பர் ஆய்விடுவார் உணரப்பா நீ”[15]**

என்று முழங்கினார். பொதுவுடைமைக் கட்சியினரே பெரியாரையும் பாரதிதாசனையும் கடுமையாக விமர்சனம் செய்யும் ஒரு காலகட்டம் ஒருபுறம் ஏற்பட்டது. மறுபுறம் முதலாளி வர்க்கத்தின் ஏளனத்திற்கும் இவர்கள் ஆட்பட நேர்ந்தது. ஒருமுறை பெரியாரைப் பார்த்து ஒருவர், “என்ன ஒரே அடியா பொதுவுடைமை பேசுகிறீர்கள். உங்கள் மனைவியைப் பொதுவுடைமை ஆக்குவீர்களா?” எனக்கேட்டார். “ஓ! தாராளமா. இப்பகூட அவுக வந்தா கூட்டிக்கிட்டு போங்க. இல்லைண்ணா அவுக ஏதாச்சும் கொடுத்தா வாங்கிட்டு போங்க” என்று பட்டெனப் பதில் சொன்னார் பெரியார். தங்களுடைய கொள்கைக்காக எழுந்த எதிர்ப்புகளைக் கண்டு இருவரும் ஒருபோதும் அஞ்சியதில்லை; அதிகாரவர்க்கத்திடம் கெஞ்சியதும் இல்லை.

காரல்மார்க்சு மதம் மனிதனுக்கு அபினி என்றார். அபினி என்ற போதைப் பொருளைத் தின்றால்தான் போதை வரும். மதத்தை நினைத்தாலே மனிதனுக்குப் போதை உண்டாகிவிடும் என்றார் பெரியார். பகுத்தறிவாளராக இல்லாத ஒருவர்

பொதுவுடைமை வாதியாக மாறமுடியாது என்பதும் பெரியார் சொன்னவிளக்கம். விதி மீதுள்ள நம்பிக்கையைத் தகர்த்து எறியாமல் இந்த நாட்டிலும் எந்த நாட்டிலும் பொதுவுடைமை வராது. வந்தாலும் நிற்காது என்பது பெரியாரின் தொலைநோக்குப் பார்வை. அதேபோல பொருளாதாரத் தத்துவங்களை விளக்கிப் பாரதிதாசன் பல பாடல்கள் பாடியுள்ளார். சான்றாக ஒன்றை மட்டும் இங்குச் சுட்ட விரும்புகின்றேன்.

**சோசலிசம்**

**இரண்டு கறவைகள் உன்னிடம் இருந்தால்**
**அண்டை வீட்டானுக்கு ஒன்று அளித்தல் சோசலிசம்!**

**காப்டலிசம்**

**கறவைகள் இரண்டில் கடிதொன்றை விற்றுக்**
**காளை வாங்குவது காப்டலிசம்!**

**கம்யூனிசம்**

**ஆ இரண்டனையும் ஆள்வோர்க்கு விற்றுத்**
**தேவைக்குப் பால்பெறச் செப்பல் கம்யூனிசம்!**

**பாசிசம்**

**பகர் இரு கறவையைப் பறித்து ஆள்வோரிடம்**
**தொகை தந்து பால்பெறச் சொல்வது பாசிசம்!**

**நாசிசம்**

**உரியவன் தன்னை ஒழித்தே அவனின்**
**கறவை இரண்டையும் கைப்பற்றல் நாசிசம்!**

**நியூடிலசம்**

**இரண்டு கறவையால் திரண்ட பால் அனைத்தையும்**
**சாக்கடைக்கு ஆக்குவது தான் நியூடிலசம்!**[16]

## ஒப்புமையும் ஒற்றுமையும்:

பெரியாருக்கும் பாரதிதாசனுக்கும் 'இப்படித்தான் தமிழ் வளர்ச்சி இருக்கவேண்டும்' என்ற கருத்தில் ஒற்றுமை உண்டு. தமிழ் வளர்ச்சிக்குக் கடவுள்வெறியும் சமயவெறியும் சாதிவெறியும் நோய்கள் என்றனர் இருவரும். அவற்றை விலக்கிவிட்டு இருக்கும் நிலையை மாற்றிடப் புரட்சி மனத்தோடு படைக்கப்படும் படைப்புக்களை வரவேற்றனர்.

**"கடவுள்வெறி சமயவெறி**
**கன்னல் தமிழுக்கு நோய், நோய் நோயே!**
**இடைவந்த சாதி என்னும்**
**இடர் ஒழிந்தால் ஆள்பவள் நம் தாய், தாய் தாயே!"**[17]

என்ற கோட்பாட்டில் ஒரே நேர்க்கோட்டில் பெரியாரும் பாரதிதாசனும் பயணித்தனர்.

## அவர்தாம் பெரியார்:

1946இல் பாரதிதாசனுக்குப் புரட்சிக்கவிஞர் என்ற பட்டத்தை வழங்கி உருவா 25,000. பொற்கிழியும் தந்து அறிஞர் அண்ணா பாராட்டுவிழா எடுத்தார். அந்த நிகழ்ச்சியில் பெரியார் கலந்து கொள்ளவில்லை. அது பாரதிதாசனுக்கு ஒரு மனக்குறையாகப் பட்டிருக்கலாம். 1949இல் பெரியார் மணியம்மையாரை **வாழ்க்கை ஒப்பந்தம்** செய்துகொண்ட **ஏற்பாடும்** பாரதிதாசனுக்கு உடன்பாடானது அல்ல. எனினும் பாரதிதாசன் பெரியாரின் புகழைப் பாடாமல் விட்டதில்லை. 1958இல் இந்திய அரசியல் சட்ட நகலைத் தீயிட்டுக் கொளுத்தியதால் பெரியாருக்கு 6 மாதம் சிறைத்தண்டனை வழங்கப்பட்டது. சிறைத்தண்டனை முடிந்து விடுதலை செய்யப்பட்ட பெரியாருக்குப் பெரிய வரவேற்பு கொடுக்கப்பட்டது. மக்கள் கூட்டத்தின் நடுவே சாரட்டு வண்டியில் அமர்ந்துவந்த பெரியாரைப் பார்த்து பாரதிதாசன் பாடிய பாட்டுத்தான் "அவர்தாம் பெரியார்" எனத் தொடங்கும் பாடல்.

அந்தப் பாடலுக்கு மறைந்த நாவலர் இரா. நெடுஞ்செழியன் நேர்த்தியான, ஆழமான விளக்கம் கூறியுள்ளார்:

மக்களின் அன்புக்கடலில், மிதந்து வரும் தங்கத்தேரில், பெரியார் அறிவின் தேக்கமாக

அமர்ந்திருக்கிறார். மக்கள் நெஞ்சில் அவர் ஒரு மலிவுப்பதிப்பு நூலாகவும், வஞ்சக எண்ணம் கொண்டோருக்கு ஒரு கொடிய நெருப்பாகவும் காட்சியளிக்கிறார். அவர் பண்புகளின் இருப்பிடமாகவும் விடுதலை விரும்பும் பெரும்படையின் ஒரு தொகுப்பாகவும் இருக்கிறார். அவர் தில்லி என்ற எலிக்கு ஒரு வான் பருந்தாகவும், தெற்கின் தினவெடுத்த தோள்களுக்கு ஒரு மருந்தாகவும், கல்லாதவர்க்கெல்லாம் கலை விருந்தாகவும், கற்றவர்க்கெல்லாம் ஒரு வண்ணச் சிந்தாகவும் இருந்துவருகிறார். தென்னாட்டைச்சுரண்டுகிற வடநாட்டவர்க்கு அவர் ஒரு சூள் அறுக்கும் பனங்கறுக்கு மட்டையாகவும், மருட்சியுற்ற தமிழர்க்கெல்லாம் வாழவைக்கும் அருட்பெருக்காகவும் செயலாற்றி வருகிறார். அவர் தொண்டுகள் பலசெய்து பழுத்த பழமாகக் காட்சியளிக்கிறார். அவரது தூயவெண்தாடி மார்பிலே வந்து விழுகின்றது. அவரது அறிவின் சிறப்பைக் கண்டு உலகம் தொழுது ஏத்தி நிற்கின்றது. அவருடைய மனம் என்னும் குகையிலிருந்து சிறுத்தை சீறிப் பாய்ந்து வரும். அவர் தமிழர் முயன்று பெற்ற நன்கொடை. தன்மானம் பாயும் உணர்வாளர். அவர் நாம் அறப்போர் புரியக் கிடைத்த வாட்படை. நாம் அவருடைய அறப்போருக்கு நம்மை ஒப்படைப்போம்”18 இப்படிப் புரட்சிக்கவிஞர் பாட்டுக்கு அழகான அருமையான பொருள் சொன்னார் இரா. நெடுஞ்செழியன்.

இதோ அந்தப் பாடல்:

“அவர் தாம் பெரியார் – பார்
அவர்தாம் பெரியார்
அன்புமக்கள் கடலின் மீதில்
அறிவுத்தேக்கம் தங்கத்தேரில்! – அவர்தாம்
மக்கள் நெஞ்சில் மலிவுப் பதிப்பு
வஞ்சகர்க்கோ கொடிய நெருப்பு
மிக்க பண்பின் குடியிருப்பு
விடுதலைப் பெரும்படையின் தொகுப்பு! – அவர்தாம்
தில்லி எலிக்கு வான்பருந்து
தெற்குத் திசையின் படைமருந்து
கல்லாருக்கும் கலைவிருந்து
கற்றவர்க்கோ வண்ணச் சிந்து! – அவர்தாம்
சுரண்டுகின்ற வடக்கருக்குச்
சூள் அறுக்கும் பனங்கருக்கு!
மருண்டு வாழும் தமிழருக்கு
வாழவைக்கும் அருட்பெருக்கு! – அவர்தாம்
தொண்டு செய்து பழுத்த பழம்
தூயதாடி மார்பில் விழும்!
மண்டைச் சுரப்பை உலகு தொழும்!
மனக்குகையில் சிறுத்தை எழும் – அவர்தாம்
தமிழர் தவம் செய்த நன்கொடை
தன்மானம் பாயும் தலைமேடை
நமக்குத் தாண்டி வந்த வாட்படை
நமை அவரின் போருக்கு ஒப்படை! – அவர்தாம்”[19]

பாரதிதாசன் தன் ஊடலை மறந்து, பெருமிதத்தோடு பெரியாரைப் பற்றி வடித்தெடுத்த முத்திரைப்பாடல் இது.

பெரியாரின் கிளர்ச்சிகளையும் சாதனைகளையும் உணர்ச்சியுடன் கவிதையாகப் படைத்த பெருமை பாரதிதாசனுக்கு மட்டுமே உள்ளது. பாரதிதாசனுக்குத் தாம் கண்டதும் கொண்டதும் ஒரே தலைவர் பெரியார்தான். அதனால் தன் ஆயுள்வரை பெரியாருக்கு ஒரு நங்கூரம் போல இருந்தார் பாரதிதாசன். பாரதிதாசனுக்குப் பெரியார் சுக்குநூறாய் உடைத்தெறிந்த சாதிமதங்கள்தான் வானத்தில் சிதறிக் கிடக்கின்ற விண்மீன்கள். பாரதிதாசனுக்கு பெரியாரின் முகம் போலக் காட்சி அளிக்கின்றதாம் அழகு நிலா.

“மக்கள் வாழும் உலகினில்
மதங்கள் சாதி வேற்றுமை
சுக்கு நூறாய் ஆக்கிய
தூய பெரியார் முகமென
அக்கரைக்கண் தோன்றிடும்
அழகு நிலவில் இறங்குவாய்”[20]

இப்படிப் பாட்டியற்றிப் பகுத்தறிவுப் பகலவன்மீது தான் கொண்டிருந்த மதிப்பை வெளிப்படுத்துகின்றார் பாரதிதாசன்.

## புரட்சிக்கவிஞர் படத்திறப்பு:

புரட்சிக்கவிஞரின் பாடல்களைக் குஞ்சிதம் குருசாமி 1937இல் முதன்முதலாகப் பதிப்பித்துத் தனிநூலாக வெளியிட்டார். அதற்குப்பிறகு – ஓராண்டு சென்ற பின்னர் அதாவது 1938இல் காஞ்சிபுரத்தில் நடைபெற்ற இந்தித் திணிப்பு எதிர்ப்பு மாநாட்டில் பெரியார், புரட்சிக்கவிஞர் பாரதிதாசனின் உருவப்படத்தைத் திறந்து வைத்து அவர் ஆற்றிய தொண்டுகளைப் பாராட்டிப் பேசினார். உங்களுக்கு வியப்பாக இருக்கும். பெரியாரைவிட வயதில் இளையவர் பாரதிதாசன். அதுமட்டுமல்ல உயிரோடு இருந்த பாரதிதாசனின் படைத்தைத் திறந்துவைத்து உரை நிகழ்த்தினார் பெரியார் என்றால் உங்களால் நம்பமுடியுமா? பகுத்தறிவாளர்களுக்கு அந்த நிகழ்ச்சி மிகச் சாதாரணமானது; பழக்கமானது.

பாரதிதாசன் மறைவுக்குப்பின்னர் சிவகங்கை மன்னர் ராஜா துரைசிங்கம் நினைவுக்கல்லூரியில் 1973இல் நிகழ்த்திய சொற்பொழிவில் பாரதிதாசனை அருமையாகச் சித்திரித்தார் பெரியார்.

“பாரதிதாசன் புதுமைக் கருத்துக்களையும் மக்கள் சமூகத்திற்குத் தேவையான சமதர்மக் கருத்துக்களையும் துணிந்து வெளியிட்டார்.”

“அவர் கடவுள், மதம், சாஸ்திரம், பெண்ணடிமை, மூடநம்பிக்கைகள் இவைகளைக் கண்டித்து நன்றாகப் பாடியுள்ளார். இன்றைக்குப் பகுத்தறிவாளர்களுக்கு எடுத்துச் செல்லத்தக்க சாதனமாகப் புரட்சிக்கவிஞர் பாடல்கள் அமைந்துள்ளன”[21] என்று புகழாரம் சூட்டினார் பெரியார்.

## நிறைவாக...

பெரியாரும் பாரதிதாசனும் ஒத்த சித்தாந்தத் தளத்தில் இயங்கினர் என்பதே உண்மையின் உண்மையாகும். பெரியாரை ஏற்போர், பெரியார் எதிர்ப்பாளர் யாராலும் அவரைப் புறந்தள்ள முடியவில்லை. ஆனால் பாரதிதாசனை எதிர்ப்போர் அவரை இருட்டடிப்புச் செய்கின்றனர்; புறக்கணிக்கின்றனர். திராவிட இயக்க மெய்யன்பர்களைத் தவிரப் பிறர் அவரைப் பற்றி அதிகம் பேசுவது இல்லை. சுப்பிரமணிய பாரதியோடு தமிழ்க்கவிஞர் சகாப்தம் முடிந்துவிட்டதாக எண்ணிக் கொள்கின்றனர். அது திட்டமிட்டுச் செய்துவரும் இலக்கிய வஞ்சனை. அதனை முறியடித்தே தீரவேண்டும். பாரதிதாசனைப் பற்றி உரைவீச்சு நிகழ்த்தினாலும் பெரியாரைப் பற்றி உரைவீச்சு நிகழ்த்தினாலும் இருவரையும் சேர்த்தே முழங்க வேண்டும்.

## அடிக்குறிப்புகள்:

1. பாரதிதாசன் கவிதைகள் – முதல் தொகுதி, செந்தமிழ் நிலையம், புதுக்கோட்டை, 1980, ப.146.

2. பாரதிதாசன் கவிதைகள் – நான்கு பகுதிகள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1991, பக்.417-418.

3. மேலது, ப.332.

4. பாரதிதாசன் கவிதைகள் – முதல் தொகுதி, ப.128.

5. மேலது, ப.124.

6. சாமி.சிதம்பரனார், தமிழர் தலைவர், பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவன வெளியீடு, திருச்சி, 1971, பக்.166-167.

7. மேலது, ப.217.

8. மேலது, பக்.214-215.

9. புரட்சிக்கவிஞர் பாரதிதாசன், தமிழியக்கம், பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவன வெளியீடு, சென்னை, 1984, ப.29.

10. மேலது.

11. மேலது, ப.55.

12. மேலது, ப.58.

13. மேலது, ப.41.

14. பாரதிதாசன் கவிதைகள் – முதல் தொகுதி, 1980, ப.126.

15. மேலது, ப.148.

16. பாவேந்தர் பாரதிதாசன், பன்மணித்திரள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2010, ப.167.

17. புரட்சிக்கவிஞர் பாரதிதாசன், தமிழியக்கம், ப.86.

18. டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன், புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் வாழ்க்கை வரலாறு, நாவலர் நெடுஞ்செழியன் அறக்கட்டளை, சென்னை, 1994, பக்.122-123.

19. பாரதிதாசன், புகழ்மலர்கள், பூம்புகார் பிரசுரம், சென்னை, 1978, ப.50.

20. பாரதிதாசன், ஒரு தாயின் உள்ளம் மகிழ்கின்றது, பூம்புகார் பிரசுரம், சென்னை, 1978, ப.58.

21. பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள் – 2ஆம் தொகுதி, சிந்தனையாளர் கழகம், திருச்சி, 1974, பக்.1038 – 1039.

## ஆசிரியர் குறிப்பு:

பேரா. இ.கி. இராமசாமி அவர்கள் கோவை வெள்ளலூரில் பிறந்தவர். 1969-இல் தொடங்கி 2002 வரை 33 ஆண்டுகள் கல்லூரிப் பேராசிரியராக, துறைத் தலைவராக, மதுரை யாதவர் கல்லூரியின் முதல்வராகப் பொறுப்பேற்றுச்சிறப்பாகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். இவருடைய மேற்பார்வையில் நாற்பத்தியொரு பேர் ஆய்வியல் நிறைஞர் பட்டமும், ஒன்பது பேர் முனைவர் பட்டமும் பெற்றுள்ளனர். பகுத்தறிவுச் சிந்தனைச் சான்றிதழ், பட்டய வகுப்புகளை 25 ஆண்டுகள் நடத்தி, மாணவர்களின் பகுத்தறிவுச் சிந்தனைகள் வளர உதவியவர். இவர் தம் துணைவியார் மு.கசுத்தூரிபாய் அவர்களும் மதுரை யாதவர் கல்லூரி பயிரியல் துறைத் தலைவராக இருந்து ஓய்வு பெற்றவர்; பகுத்தறிவுச் சிந்தனையாளர்.

தமிழில் பாயிரங்கள், திராவிட இயக்கச் சிந்தனைகள், தமிழின் சிரிப்பு, திருக்குறள் நெறியும் பகவத் கீதையும், காந்தியடிகளும் பாரதிதாசனும், காந்தியடிகளும் கோராவும், சமூகப் புரட்சியாளர்கள் போன்ற நூல்களின் ஆசிரியர் இவர். பாரதிதாசன் பன்மணித்திரள், முப்பாலின் ஒப்புரவு என்னும் நூல்களின் பதிப்பாசிரியர். குறள் கூறும் ஊழும் கூழும், திருக்குறளில் தவமும் துறவும், திருக்குறளில் காமம் என்னும் நூல்களின் தொகுப்பாசிரியர். இவர் இயற்றிய தொல்காப்பிய ஆய்வுக் களமும் தளமும் (2023), தமிழ் நெடும்பயண அறிஞர்கள் (2023), பகுத்தறிவு முத்துச்சரம் (2023) என்ற நூல்கள் அண்மையில் வெளிவந்துள்ளன.

பணி ஓய்விற்குப் பின்னும் தமிழ்ப் பணியைத் தொடர்ந்து வரும் இவர், அரிய கருத்துக்களைச் சுவைபட மெய்ப்பாடுகளுடன் எளிய மொழிநடையில் எடுத்துரைக்கும் நாவன்மையாளர். மதுரை, திருச்சி வானொலிகளில் பொழிவுகளை நிகழ்த்தியுள்ளார். சங்க இலக்கியம், காப்பியம், மரபிலக்கணம், இக்கால இலக்கியம் ஆகிய இலக்கிய வகைமைகளில் ஆய்வும் தோய்வும் உடையவர். தந்தை பெரியரின் கொள்கைவழி நின்றும், புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் தமிழ் உணர்வோடு ஒன்றியும் விளங்கும் பெருமைக்குரியவர். திராவிட இயக்க – இலக்கியக் கொள்கைகள் பற்றிய ஆய்வுக் கட்டுரைகளை எழுதி வருபவர். தமிழியல் உணர்வுடைய, பகுத்தறிவுப் பார்வை உடைய மாணவப் பரம்பரையை உருவாக்கிய பெருந்தகையர்.